QC-008

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

**Name of the Test**

| | |
|---|---|
| Local Fund Audit Department Test - Commercial Book - keeping (WithoutBooks) | 064 |

Maximum Time: One and Half Hour Maximum Marks: 60

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE
கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 60 number of questions in objective Type.
இந்தக் கணினி வழித் தேர்வானது, 60 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

1. Prepare Journal Entry, Paid Dinesh his salary by cash for the month of June.
குறிப்பேடு தருக. திரு. தினேஷ்ற்கு ஜுன் மாதத்திற்கான ஊதியம் ரொக்கமாக வழங்கியது.

(A) Cash A/c Dr
to Dinesh A/c
ரொக்க க/கு ப
தினேஷ் க/கு

(B) Dinesh A/c Dr
to Cash A/c
தினேஷ் க/கு ப
ரொக்க க/கு

(C) Cash A/c Dr
To Salary A/c
ரொக்க க/கு ப
ஊதிய க/கு

(D) Salary A/c Dr
To Cash A/c
ஊதிய க/கு ப
ரொக்க க/கு

2. Prepare Journal Entry, Paid to Ragul by cash
குறிப்பேடு தருக. திரு. ராகுலுக்கு ரொக்கமாக செலுத்தியது

(A) Cash A/c Dr
to Ragul A/c
ரொக்க க/கு ப
ராகுல் க/கு

(B) Ragul A/c Dr
to Cash A/c
ராகுல் க/கு ப
ரொக்க க/கு

(C) Cash A/c Dr
To Salary A/c
ரொக்க க/கு ப
ஊதிய க/கு

(D) Salary A/c Dr
To Cash A/c
ஊதிய க/கு ப
ரொக்க க/கு

3. The incorrect accounting equation is
கணக்கியல் சமன்பாட்டின்படி சரியாக இல்லாதது

(A) Assets = Liabilities + Capital
சொத்துக்கள் = பொறுப்புகள் + முதல்

(B) Assets = Capital + Liabilities
சொத்துக்கள் = முதல் + பொறுப்புகள்

(C) Liabilities = Assets + Capital
பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல்

(D) Capital = Assets – Liabilities
முதல் = சொத்துக்கள் – பொறுப்புகள்

4. Prepaid rent is a
முன்கூட்டிச் செலுத்திய வாடகை ஒரு

(A) Nominal A/c
பெயரளவு கணக்கு

(B) Personal A/c
ஆள்சார் கணக்கு

(C) Real A/c
சொத்துக் கணக்கு

(D) Representative personal A/c
பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

5. If the total of the debit side of an account exceeds the total of its credit side, it means
ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்

(A) Credit balance
வரவு இருப்பு

(B) Debit balance
பற்று இருப்பு

(C) Nil balance
இருப்பு இன்மை

(D) Debit and Credit balance
பற்று மற்றும் வரவு இருப்பு

6. Accrued interest on investment will be shown
முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி தோன்றுவது

(A) On the credit side of profit and loss account
இலாப நட்டக் கணக்கின் வரவுப் பக்கம்

(B) On the assets side of balance sheet
இருப்பு நிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம்

(C) Both (A) and (B)
மேற்கண்ட இரண்டும் (A) மற்றும் (B)

(D) None of these
மேற்கண்ட எதுவுமில்லை

7. Closing stock is valued at
இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படுவது

(A) Cost price
அடக்க விலையில்

(B) Market price
சந்தை விலையில்

(C) Cost price or market price whichever is higher
அடக்கவிலை அல்லது சந்தை விலை இதில் எது அதிகமோ அந்த விலையில்

(D) Cost price or net realisable value whichever is lower
அடக்க விலை அல்லது நிகரத் தீர்வு மதிப்பு இதில் எது குறைவோ அந்த விலையில்

8. Wages outstanding will appear in
கொடுபட வேண்டிய கூலி தோன்றுவது

(A) The trading account on the credit side
வியாபாரக் கணக்கில் வரவுப் பக்கம்

(B) The profit and loss account on the credit side
இலாப நட்டக் கணக்கில் வரவுப் பக்கம்

(C) The balance sheet on the assets side
இருப்பு நிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம்

(D) The balance sheet on the liabilities side
இருப்பு நிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம்

9. Closing stock will appear in Balance sheet
இறுதிச் சரக்கிருப்பு இருப்பு நிலைக் குறிப்பில் இடம்பெறுவது

(A) Shown on the liabilities side as a current liability
பொறுப்புகள் பக்கம் நடப்புப் பொறுப்பாக காட்டப்படும்

(B) Shown on the assets side as a current asset
நடப்புச் சொத்தாக சொத்துகள் பக்கம் காண்பிக்கப்படும்

(C) Shown on the assets side as a deduction from bank balance
சொத்துகள் பக்கம் வங்கியிருப்பிலிருந்து கழித்துக் காட்டப்படும்

(D) Shown on the liabilities side as an addition to capital
முதலுடன் கூட்டப்பட்டு பொறுப்புகள் பக்கம் காட்டப்படும்

10. Prepare adjusting entry for Outstanding salary
கொடுபட வேண்டிய கூலிக்கு சரிக்கட்டுப் பதிவு

(A) Salaries A/c Dr
To Prepaid Salary A/c
சம்பளக் க/கு ப
முன்கூட்டி வழங்கிய சம்பளக் க/கு

(B) Outstanding salaries A/c Dr
To Salaries A/c
கொடுபட வேண்டிய சம்பள க/கு ப
சம்பளக் க/கு

(C) Salaries A/c Dr
To Outstanding salaries A/c
சம்பளக் க/கு ப
கொடுபட வேண்டிய சம்பளக் க/கு

(D) Salaries A/c Dr
To Cash A/c
சம்பளக் க/கு ப
ரொக்க க/கு

11. A firm has capital of Rs. 1,00,000 and the external liabilities of Rs. 60,000. Its Asset would be
ஒரு நிறுவனத்தின் முதலின் மதிப்பு ரூ.1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ரூ.60,000 எனில், அந்நிறுவனத்தில் சொத்தானது

(A) Rs. 1,60,000
ரூ. 1,60,000

(B) Rs. 60,000
ரூ. 60,000

(C) Rs. 1,00,000
ரூ. 1,00,000

(D) Rs. 40,000
ரூ. 40,000

12. Withdrawal of cash from business by the proprietor should be credited to
உரிமையாளரால், வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகை வரவு வைக்கப்படும் கணக்கு

(A) Drawings A/c
எடுப்புகள் கணக்கு

(B) Cash A/c
ரொக்கக் கணக்கு

(C) Capital A/c
முதல் கணக்கு

(D) Purchases A/c
கொள்முதல் கணக்கு

13. Accounting equation is formed based on the accounting principle of
கணக்கியல் சமன்பாடு, எந்த கணக்கியல் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது?

(A) Dual aspect
இரட்டைத் தன்மை

(B) Consistency
நிலைத்தன்மை

(C) Going concern
நிறுவனத் தொடர்ச்சி

(D) Accrual
நிகழ்வுத்தன்மை

14. Main objective of preparing ledger account is to
பேரேட்டுக் கணக்குகள் தயாரிப்பதன் முக்கிய நோக்கம்

(A) Ascertain the financial position
நிதி நிலைமையை அறிய

(B) Ascertain the profit or loss
இலாபம் அல்லது நட்டத்தை அறிய

(C) Ascertain the profit or loss and the financial position
நிதி நிலைமை மற்றும் இலாப நட்டத்தை அறிய

(D) Know the balance of each ledger account
ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய

15. If the total of the debit side of an account lower the total of its credit side, it means
ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் குறைவாக இருப்பின் அதன் பொருள்

(A) Credit balance
வரவு இருப்பு

(B) Debit balance
பற்று இருப்பு

(C) Nil balance
இருப்பு இன்மை

(D) Debit and Credit balance
பற்று மற்றும் வரவு இருப்பு

16. The amount brought into the business by the proprietor should be credited to
உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டு வரப்படும் தொகைக்கு வரவு செய்யப்படுவது

(A) Cash account
ரொக்க கணக்கு

(B) Drawings account
எடுப்புக் கணக்கு

(C) Capital account
முதல் கணக்கு

(D) Suspense account
அனாமத்து கணக்கு

17. If we Prepare Furniture A/c from the following transactions. The Furniture A/c Debit Balance would be Rs. ——————
பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கை தயாரித்தால் அறைகலன் கணக்கின் பற்று இருப்பு ரூ. ——————

Jan 1, Furniture in hand Rs. 2,000
ஜன 1, கையில் உள்ள அறைகலன் ரூ. 2,000
Jan 1, Purchased furniture for cash Rs. 4,000
ஜன 1, அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது ரூ. 4,000
Jan 30, Sold furniture Rs. 400
ஜன 30, அறைகலன் விற்றது ரூ. 400

(A) 6400

(B) 2400

(C) 5600

(D) 1600

18. After the preparation of ledger, the next step is the preparation of
பேரேட்டுக் கணக்குகளை தயாரித்து முடித்தவுடன் அடுத்து தயாரிக்கப்படுவது

(A) Trading account
வியாபாரக் கணக்கு

(B) Trial balance
இருப்பாய்வு

(C) Journal
குறிப்பேடு

(D) Profit and loss account
இலாப நட்டக் கணக்கு

19. The trial balance contains the balance of
இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?

(A) Only personal accounts
ஆள்சார் கணக்குகள் மட்டும்

(B) Only real accounts
சொத்துக் கணக்குகள் மட்டும்

(C) Only nominal accounts
பெயரளவு கணக்குகள் மட்டும்

(D) All accounts
அனைத்து கணக்குகளும்

20. While preparing the trial balance, the accountant finds that the total of the credit column is short by Rs. 200. This difference will be
இருப்பாய்வு தயாரிக்கும்போது, கணக்காளர் இருப்பாய்வின் வரவு பக்கத்தில் மொத்த தொகை ரூ. 200 குறைவாக இருப்பதைக் கண்டறிந்தார். அந்த வேறுபாட்டினை அவர் என்ன செய்வார்?

(A) Debited to suspense account
அனாமத்து கணக்கில் பற்று செய்வார்

(B) Credited to suspense account
அனாமத்து கணக்கில் வரவு செய்வார்

(C) Adjusted to any of the debit balance
ஏதேனும் பற்று இருப்புக் கொண்ட கணக்கில் சரி செய்வார்

(D) Adjusted to any of the credit balance
ஏதேனும் வரவு இருப்புக் கொண்ட கணக்கில் சரி செய்வார்

21. Net profit of the business increases the
வணிகத்தின் நிகர இலாபம் ———— அதிகரிக்கும்

(A) Drawings
எடுப்புகளை

(B) Receivables
பெறுதல்களை

(C) Debts
பொறுப்புகளை

(D) Capital
முதலினை

22. Carriage inwards will be shown
உள்தூக்குக் கூலி எதில் காண்பிக்கப்படும்?

(A) In the trading account
வியாபாரக் கணக்கில்

(B) In the profit and loss account
இலாப நட்டக் கணக்கில்

(C) On the liabilities side
கடன் பக்கத்தில்

(D) On the assets side
சொத்து பக்கத்தில்

23. Goodwill is classified as
நற்பெயர் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?

(A) A current asset
ஓர் நடப்புச் சொத்து

(B) A liquid asset
ஓர் நீர்மைச் சொத்து

(C) A tangible asset
புலனாகும் சொத்து

(D) An intangible asset
புலனாகாச் சொத்து

24. Salaries appearing in the trial balance is shown on the
இருப்பாய்வில் தோன்றும் சம்பளம் எங்கு காண்பிக்கப்படும்?

(A) Debit side of trading account
வியாபாரக் கணக்கின் பற்று பக்கம்

(B) Debit side of profit and loss account
இலாப நட்டக் கணக்கின் பற்று பக்கம்

(C) Liabilities side of the balance sheet
இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம்

(D) Assets side of the balance sheet
இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம்

25. Current assets does not include
பின்வருவனவற்றில் எது நடப்புச் சொத்துகளில் சேராதது?

(A) Cash
ரொக்கம்

(B) Stock
சரக்கிருப்பு

(C) Furniture
அறைகலன்

(D) Prepaid expenses
முன்கூட்டிச் செலுத்திய செலவு

26. Purchases of fixed assets on credit basis is recorded in
நிலைச்சொத்துக்கள் கடனுக்கு வாங்கியது பதிவு செய்ய வேண்டிய ஏடு

(A) Purchases book
கொள்முதல் ஏடு

(B) Sales book
விற்பனை ஏடு

(C) Purchases returns book
கொள்முதல் திருப்ப ஏடு

(D) Journal proper
உரிய குறிப்பேடு

27. Purchase returns book is used to record
கொள்முதல் திருப்ப ஏடு பதிவு செய்வது

(A) returns of goods to the supplier for which cash is not received immediately
சரக்களித்தோருக்கு, உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு

(B) returns of assets to the supplier for which cash is not received immediately
அளித்தவரிடம் உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சொத்துகள்

(C) returns of assets to the supplier for which cash is received immediately
உடனடியாக பணம் பெற்றுக் கொண்டு சொத்து வாங்கியவரிடம் திருப்பியது

(D) none of the above
மேற்கண்ட எதுவுமில்லை

28. The total of the sales book is posted periodically to the credit of
விற்பனை ஏட்டின் மொத்தம் ஒரு குறிப்பிட்ட கால அளவில் வரவு வைக்கப்படுவது

(A) Sales account
விற்பனை கணக்கு

(B) Cash account
ரொக்க கணக்கு

(C) Purchases account
கொள்முதல் கணக்கு

(D) Journal proper
உரிய குறிப்பேடு

29. Balance as per cash book is Rs. 23,125. Bank charge of Rs. 625 debited by the bank is not yet shown in the cash book. What is the bank statement balance now?
ரொக்க ஏட்டின் படி இருப்பு ரூ. 23,125. வங்கியால் பற்று செய்யப்பட்ட வங்கிக் கட்டணம் ரூ. 625 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை எனில் வங்கி அறிக்கையின் படி இருப்பு என்ன?

(A) Rs. 22,500 credit balance
ரூ. 22,500 வரவு இருப்பு

(B) Rs. 22,500 debit balance
ரூ. 22,500 பற்று இருப்பு

(C) Rs. 23,750 debit balance
ரூ. 23,750 பற்று இருப்பு

(D) Rs. 23,750 credit balance
ரூ. 23,750 வரவு இருப்பு

30. Which one of the following is not a timing difference?
பின்வருவனவற்றில் எது காலத்தினால் ஏற்படும் வேறுபாடு அல்ல?

(A) Cheque deposited but not yet credited
செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது

(B) Cheque issued but not yet presented for payment
விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது

(C) Amount directly paid into the bank
வங்கியில் நேரடியாகச் செலுத்திய தொகை

(D) Wrong debit in the cash book
ரொக்க ஏட்டில் தவறுதலாக பற்று வைத்தது

31. Balance as per bank statement is Rs. 12,325. Cheque deposited, but not yet credited by the bank is Rs. 433. What is the balance as per bank column of the cash book?
வங்கி அறிக்கையின் படி இருப்பு ரூ. 12,325. செலுத்திய காசோலை வங்கியால் இன்னும் வரவு வைக்கப்படாதது ரூ. 433. ரொக்க ஏட்டில் வங்கிப் பத்தியின் இருப்பு எவ்வளவு?

(A) Rs. 12,758 overdraft
ரூ. 12,758 மேல்வரைப்பற்று

(B) Rs. 12,758 favourable
ரூ. 12,758 சாதகமான இருப்பு

(C) Rs. 11,892 overdraft
ரூ. 11,892 மேல்வரைப்பற்று

(D) Rs. 11,892 favourable
ரூ. 11,892 சாதகமான இருப்பு

32. If the debit and credit aspects of a transaction are recorded in the cash book it is
ஒரு நடிவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகளை ரொக்க ஏட்டில் பதிந்தால், அது

(A) Contra entry
எதிர்ப்பதிவு

(B) Compound entry
கூட்டுப் பதிவு

(C) Single entry
ஒற்றைப் பதிவு

(D) Simple entry
சாதாரணப் பதிவு

33. Petty cash may be used to pay
எந்தச் செலவிற்கு சில்லறை ரொக்கத்திலிருந்து கொடுக்கலாம்?

(A) The expenses relating to postage and conveyance
தபால் செலவு மற்றும் பயணச் செலவுகள்

(B) Salary to the Manager
மேலாளரின் ஊதியம்

(C) Purchase of furniture and fixtures
அறைகலன் மற்றும் பொருத்துகைகள் வாங்க

(D) Purchase of raw materials
மூலப்பொருட்கள் வாங்க

34. Cash book is a
ரொக்க ஏடு ஒரு

(A) Subsidiary book
துணை ஏடு

(B) Principal book
முதன்மை ஏடு

(C) Journal proper
உரிய குறிப்பேடு

(D) Both subsidiary book and principal book
துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும்

35. When money is withdrawn from bank, the bank?
வங்கியிலிருந்து பணம் எடுக்கும்போது வங்கியானது.

(A) Credits customer's account
வாடிக்கையாளர் கணக்கில் வரவு செய்யும்

(B) Debits customer's account
வாடிக்கையாளர் கணக்கில் பற்று செய்யும்

(C) Debit and credits customer's account
வாடிக்கையாளர் கணக்கில் பற்று மற்றும் வரவு செய்யும்

(D) None of these
மேற்கண்ட ஏதுமில்லை

36. A bank reconciliation statement is prepared to know the causes for the difference between :
எந்த வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிய வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிக்கப்படுகிறது

(A) The balance as per the cash column of the cash book and bank column of the cash book
ரொக்க ஏட்டின் படி ரொக்கப்பத்தியின் இருப்பு மற்றும் ரொக்க ஏட்டின் படி வங்கிப்பத்தியின் இருப்புக்கும் இடையேயான வேறுபாடு

(B) The balance as per the cash column of the cash book and bank statement
ரொக்க ஏட்டின் படி ரொக்கப்பத்தியின் இருப்பு மற்றும் வங்கி அறிக்கையின் படியான இருப்புக்கும் இடையேயான வேறுபாடு

(C) The balance as per the bank column of the cash book and bank statement
ரொக்க ஏட்டின் படி வங்கிப்பத்தியின் இருப்பு மற்றும் வங்கி அறிக்கையின் படியான இருப்புக்கும் இடையேயான வேறுபாடு

(D) The balance as per petty cash book and the cash book
சில்லறை ரொக்க ஏட்டின் இருப்பு மற்றும் ரொக்க ஏட்டின் இருப்புக்கும் இடையேயான வேறுபாடு

37. Sale of old furniture on credit for Rs. 500 was entered in the sales book. Which Errors appeared here?
பழைய அறைகலன் ரூ. 500க்கு கடனுக்கு விற்றது விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்பட்டது. இது எவ்வகையான பிழை?

(A) Entering the purchase of an asset in the purchases book
சொத்து வாங்கியதை கொள்முதல் ஏட்டில் பதிவு செய்தல்

(B) Treating a revenue expenditure as a capital expenditure
ஒரு வருவாயினச் செலவை முதலினச் செலவாகப் பாவித்தல்

(C) Entering the sale of an asset in the sales book
சொத்து விற்றதை விற்பனை ஏட்டில் பதிவு செய்தல்

(D) Treating a capital expenditure as a revenue expenditure
ஒரு முதலினச் செலவை வருவாயினச் செலவாகப் பாவித்தல்

38. What type of accounts do real accounts represent?
பின்வரும் எது சொத்து கணக்கினை பிரதிபலிக்கிறது?

(A) Tangible assets liabilities and owners equity
திடமான சொத்துக்கள் பொறுப்புகள் மற்றும் உரிமையாளரின் பங்கு

(B) Expenses payments
செலவுகள் மற்றும் செலுத்துகைகள்

(C) Dividend and income
பங்காதாயம் மற்றும் வருமானங்கள்

(D) None of these
மேற்கூறிய எதுவுமில்லை

39. The difference in trial balance is taken to
இருப்பாய்வின் வேறுபாடு எடுத்துச் செல்லப்படுவது

(A) The capital account
முதல் கணக்கிற்கு

(B) The trading account
வியாபாரக் கணக்கிற்கு

(C) The suspense account
அனாமத்துக் கணக்கிற்கு

(D) The profit and loss account
இலாப நட்டக் கணக்கிற்கு

40. A credit purchase of furniture from Athiyaman was debited to purchases account. Which of the following accounts should be debited while rectifying this error?
அதியமானிடமிருந்து கடனுக்கு அறைகலன் வாங்கியது கொள்முதல் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது. இப்பிழையைத் திருத்தம் செய்யும்போது, கீழ்கண்டவற்றில் எந்தக் கணக்கைப் பற்று வைக்க வேண்டும்?

(A) Purchases account
கொள்முதல் கணக்கு

(B) Athiyaman account
அதியமான் கணக்கு

(C) Furniture account
அறைகலன் கணக்கு

(D) None of these
இவை ஏதுமில்லை

41. Wages paid for installation of machinery wrongly debited to wages account is an error of
இயந்திரம் நிறுவுவதற்கு செலுத்தப்பட்ட கூலியை கூலிக் கணக்கில் பற்று வைப்பது

(A) Partial omission
பகுதி விடு பிழை

(B) Principle Error
விதிப் பிழை

(C) Complete omission
முழு விடு பிழை

(D) Duplication
இருமுறை பதிந்த பிழை

42. The following error were detected before the preparation of trial balance. Rectify it. "Sales book is overcast by Rs. 200"
கீழ்க்கண்ட பிழை இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டது. திருத்தவும். "விற்பனை ஏட்டில் ரூ. 200 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது"

(A) Sales account should be credited with Rs. 100
விற்பனைக் கணக்கில் ரூ. 100 வரவு வைக்க வேண்டும்

(B) Sales account should be debited with Rs. 200
விற்பனைக் கணக்கில் ரூ. 200 பற்று வைக்க வேண்டும்

(C) Purchases account should be debited with Rs. 300
கொள்முதல் கணக்கில் ரூ. 300 பற்று வைக்க வேண்டும்

(D) Purchases account should be credited with Rs. 400
கொள்முதல் கணக்கில் ரூ. 400 வரவு வைக்க வேண்டும்

43. A depreciable asset may suffer obsolescence due to
ஒரு சொத்து எதன் காரணமாக வழக்கொழிவு அடைகிறது?

(A) Passage of time
காலப்போக்கு

(B) Wear and tear
தேய்வு மற்றும் உராய்வு

(C) Technological changes
தொழில்நுட்ப மாற்றங்கள்

(D) None of the above
மேற்கூறியவற்றில் ஏதுமில்லை

44. Residual value of an asset means the amount that it can fetch on sale at the ———— of its useful life

சொத்தின் இறுதி மதிப்பு என்பது, பயனளிப்புக் காலத்தின் ———— அச்சொத்திலிருந்து கிடைக்கும் தொகையாகும்

(A) Beginning
ஆரம்பத்தில்

(B) End
இறுதியில்

(C) Middle
மத்தியில்

(D) None of the above
இவைகளில் ஏதுமில்லை

45. Interest on bank deposits is
வங்கி வைப்புகள் மீதான வட்டி

(A) Capital receipt
முதலின வரவு

(B) Revenue receipt
வருவாயின வரவு

(C) Capital expenditures
முதலினச் செலவு

(D) Revenue expenditures
வருவாயினச் செலவு

46. Revenue expenditure is intended to benefit
வருவாயினச் செலவின் பலன் கிடைப்பது

(A) Past period
கடந்த காலத்திற்கு

(B) Future period
எதிர் காலத்திற்கு

(C) Current period
நடப்பு காலத்திற்கு

(D) Any period
எந்த காலத்திற்கும்

47. Classify the following items into capital expenditure?
பின்வருவனவற்றில் எது முதலின செலவினமாகும்?

(A) Pulling down the old building and rebuilding Rs. 4,00,000
பழைய கட்டடத்தை இடித்து புதிய கட்டம் கட்டியது ரூ. 4,00,000

(B) Loss on sale of old furniture
பழைய அறைகலன் விற்றதில் ஏற்பட்ட நட்டம்

(C) Carriage paid on goods sold
சரக்கு விற்பனையின் பேரில் செலுத்திய ஏற்றிச்செல் கட்டணம்

(D) Advertising expenditure, the benefits of which will last for three years
மூன்று ஆண்டுகளுக்கு பயனளிக்கும் வகையில் செய்யப்பட்ட விளம்பரச் செலவு

48. What is the amount invested by the owner or proprietor is an organization?
ஒரு நிறுவனத்தில் அதன் நிறுவனர் செய்த முதலீட்டை குறிப்பது எது?

(A) Capital
முதல்

(B) Drawings
எடுப்பு

(C) Goods
சரக்கு

(D) Purchase
கொள்முதல்

49. Which one of the following is not a branch of accounting?
பின்வருவனவற்றில் எது கணக்கியலின் பிரிவுகளில் இடம் பெறாது

(A) Financial accounting
நிதிநிலைக் கணக்கியல்

(B) Management accounting
மேலாண்மைக் கணக்கியல்

(C) Human resources accounting
மனிதவளக் கணக்கியல்

(D) None of the above
மேற்கண்ட ஏதுமில்லை

50. Financial position of a business is ascertained on the basis of
ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது

(A) Journal
குறிப்பேடு

(B) Trial balance
இருப்பாய்வு

(C) Balance sheet
இருப்புநிலைக் குறிப்பு

(D) Ledger
பேரேடு

51. The rule of stock valuation 'cost price or realisable value' whichever is lower is based on the accounting principle of :
இறுதி சரக்கிருப்பு, அடக்க விலை அல்லது விற்று ஈட்டக்கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு

(A) Materiality
முக்கியத்துவ மரபு

(B) Money measurement
பண மதிப்பீட்டுக் கருத்து

(C) Conservatism
முன்னெச்சரிக்கை மரபு

(D) Accrual
நிகழ்வு தீர்வு / கருத்து

52. State whether they are capital.
பின்வரும் செலவுகளை முதலினம் எவைகள் எனக் கூறவும்.

(i) Construction of building Rs. 10,00,000
கட்டடம் கட்டியதற்கான தொகை ரூ. 10,00,000

(ii) Repairs to furniture Rs. 50,000
அறைகலன் பழுதுபார்த்தது ரூ. 50,000

(iii) White-washing the building Rs. 80,000
கட்டடத்தை வெள்ளை அடிப்பதற்கானச் செலவு ரூ. 80,000

(iv) Pulling down the old building and rebuilding Rs. 4,00,000
பழைய கட்டடத்தை இடித்து புதிய கட்டடம் கட்டியது ரூ. 4,00,000

(A) (i), (ii)
(B) (i), (iv)
(C) (ii), (iii)
(D) (iii), (iv)

53. Which of the following statement prepared by a seller of goods to be sent to the buyer?
பின்வரும் எது விற்பனையாளரால் தயாரிக்கப்பட்டு, வாங்குபவருக்கு அளிக்கப்படும் அறிக்கை

(A) Drawings
எடுப்பு

(B) Invoice
இடாப்பு

(C) Voucher
சான்றுச்சீட்டு

(D) Account
கணக்கு

54. A person who receives a benefit without giving money or money's worth immediately, but liable to pay in future
ஒருவர் ஒரு பலனைப் பெற்று அதற்குரிய பணம் அல்லது பணத்தின் மதிப்பை உடனே செலுத்தாமல் எதிர்காலத்தில் செலுத்த ஒப்புக்கொண்டால் அவர் ———————— என்று அழைக்கப்படுகிறார்.

(A) Insolvency
நொடிப்பு நிலை

(B) Creditor
கடனீந்தோர்

(C) Debtor
கடனாளி

(D) Liability
பொறுப்பாளி

55. Which one of the following is representative personal account?
பின்வருவனவற்றில் பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு எது?

(A) Building A/c
கட்டடம் கணக்கு

(B) Outstanding salary A/c
கொடுபட வேண்டிய சம்பள கணக்கு

(C) Mahesh A/c
மகேஷ் கணக்கு

(D) Balan & Co.,
பாலன் நிறுவனம்

56. Trial balance is a
இருப்பாய்வு என்பது ஒரு

(A) Statement
அறிக்கை

(B) Account
கணக்கு

(C) Ledger
பேரேடு

(D) Journal
குறிப்பேடு

57. What are the types of petty cash books?
சில்லறை ரொக்க ஏடு எத்தனை வகைப்படும்?

(A) 2

(B) 3

(C) 4

(D) 5

58. Closing entries are recorded in
இறுதிப்பதிவுகள் பதிவு செய்யுமிடம்

(A) Cash book
ரொக்க ஏடு

(B) Ledger
பேரேடு

(C) Journal proper
உரிய குறிப்பேடு

(D) Purchases book
கொள்முதல் ஏடு

59. Which property of real accounts implies that they are permanent and continue to exit over multiple accounting periods?
சொத்து கணக்குகளில் எந்த சொத்து நிரந்தரமான மற்றும் பல கணக்கியல் கால கட்டங்களில் தொடர்ந்து வெளியேறுவதைக் குறிக்கிறது?

(A) Consistency
நிலைத்தன்மை

(B) Permanence
நிரந்தரம்

(C) Materiality
உருவமுள்ள

(D) Conservation
பழமைவாதம்

60. State whether they are revenue.

பின்வரும் செலவுகளை வருவாயினம் எவைகள் எனக் கூறவும்.

(i) Construction of building Rs. 10,00,000

கட்டடம் கட்டியதற்கான தொகை ரூ. 10,00,000

(ii) Repairs to furniture Rs. 50,000

அறைகலன் பழுதுபார்த்தது ரூ. 50,000

(iii) White-washing the building Rs. 80,000

கட்டடத்தை வெள்ளை அடிப்பதற்கானச் செலவு ரூ. 80,000

(iv) Pulling down the old building and rebuilding Rs. 4,00,000

பழைய கட்டடத்தை இடித்து புதிய கட்டடம் கட்டியது ரூ. 4,00,000

(A) (i), (ii)

(B) (i), (iv)

(C) (ii), (iii)

(D) (iii), (iv)

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS
# LOCAL FUND AUDIT DEPARTMENT TEST – COMMERCIAL
# BOOK – KEEPING

(Without Books)

Maximum Time : 1 hour

Maximum Marks : 40

***IMPORTANT INSTRUCTIONS***

## DESCRIPTIVE TYPE
விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.
விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

**Answer any EIGHT of the following questions.**

**எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடையளி.**

**(8 × 5 = 40)**

1. Advantages of double entry system.
இரட்டை பதிவு முறையின் நன்மைகள் யாவை?

2. Classify the following into personal, real and nominal accounts.
   (a) Capital
   (b) Building
   (c) Carriage inwards
   (d) Cash

[Turn over

(e) Commission received

(f) Bank

(g) Purchases

(h) Chandru

(i) Outstanding wages

பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.

(அ) முதல்

(ஆ) கட்டடம்

(இ) உள் ஏற்றிச் செல் செலவு

(ஈ) ரொக்கம்

(உ) தள்ளுபடிப் பெற்றது

(ஊ) வங்கி

(எ) கொள்முதல்

(ஏ) சந்துரு

(ஐ) கொடுபட வேண்டிய கூலி.

3. From the following information, prepare bank reconciliation statement as on 31st December, 2017 to find out the balance as per bank statement.

| | Particulars | Rs. |
|---|---|---|
| (a) | Balance as per bank statement | 6,000 |
| (b) | Cheques deposited on 28th December, 2017 but not yet credited | 2,000 |
| (c) | Cheques issued for Rs. 10,000 on 20th December, 2017 but not yet presented for payment | 3,000 |
| (d) | Interest on debentures directly collected by the bank not recorded in cash book | 4,000 |
| (e) | Insurance premium on building directly paid by the bank | 1,000 |
| (f) | Among wrongly credited by bank | 500 |

பின்வரும் விவரங்களிலிருந்து டிசம்பர் 31, 2017-ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயார் செய்து வங்கி அறிக்கையின் படியான இருப்பைக் கண்டறிக.

| | விவரம் | ரூ. |
|---|---|---|
| (அ) | வங்கி அறிக்கையின் படி இருப்பு | 6,000 |
| (ஆ) | டிசம்பர் 28, 2017 அன்று வங்கியில் செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படவில்லை | 2,000 |
| (இ) | டிசம்பர் 20, 2017 அன்று விடுத்த ரூ. 10,000 காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை | 3,000 |
| (ஈ) | வங்கியால் நேரடியாக வசூலிக்கப்பட்ட கடனீட்டுப் பத்திரம் மீதான வட்டி ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை | 4,000 |
| (உ) | கட்டடம் மீதான காப்பீட்டு முனைமம் வங்கியால் நேரடியாகச் செலுத்தப்பட்டது | 1,000 |
| (ஊ) | வங்கியால் தவறுதலாக வரவு வைக்கப்பட்ட தொகை | 500 |

4. Deepak is a dealer in stationery items. From the following transactions, pass journal entries for the month of January and February, 2018.

| | | Particulars | Rs. |
|---|---|---|---|
| (a) | Jan. 1 – | Commenced business with cash | 2,00,000 |
| (b) | Jan. 2 – | Opened a bank account by depositing cash | 1,00,000 |
| (c) | Jan. 3 – | 'A 4 papers' sold on credit to Padmini and Co. | 60,000 |
| (d) | Jan. 4 – | Bills received from Padmini and Co. for the amount due | |
| (e) | Jan. 5 – | Bills received from Padmini and Co. discounted with the bank | 58,000 |
| (f) | Feb. 15 – | Bills of Padmini and Co. dishonoured | |

தீபக் எழுதுபொருள் நிறுவனத்தின் நடவடிக்கைகள் 2018 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் பின்வருமாறு இருந்தன. அவைகளை குறிப்பேட்டில் பதிவு செய்க.

| | | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| (அ) | ஜனவரி 1 – | ரொக்கத்துடன் வியாபாரம் தொடங்கியது | 2,00,000 |
| (ஆ) | ஜனவரி 2 – | வங்கியில் கணக்கு ஆரம்பித்து, பணம் செலுத்தியது | 1,00,000 |
| (இ) | ஜனவரி 3 – | பத்மினி நிறுவனத்திற்கு A 4 தாள்களை கடனுக்கு விற்பனைச் செய்தது | 60,000 |
| (ஈ) | ஜனவரி 4 – | பத்மினி நிறுவனத்திடமிருந்து மேற்கண்ட தொகைக்கு பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு பெறப்பட்டது | |
| (உ) | ஜனவரி 5 – | பத்மினி நிறுவனத்தின் மாற்றுச்சீட்டு வங்கியில் கொடுத்து தள்ளுபடி செய்து பணம் பெறப்பட்டது | 58,000 |
| (ஊ) | பிப்ரவரி 15 – | பத்மினி நிறுவனத்தின் மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | |

5. What is the Features of capital expenditure?

மூலதன செலவின் இயல்புகள் யாவை?

6. From the following balances of Niruban, prepare balance sheet as on 31st December, 2017.

| Particulars | Dr. (Rs.) | Cr. (Rs.) |
|---|---|---|
| Plant and machinery | 8,00,000 | |
| Land and building | 6,00,000 | |
| Furniture | 1,50,000 | |
| Cash in hand | 20,000 | |
| Bank overdraft | | 1,80,000 |
| Debtors and Creditors | 3,20,000 | 2,40,000 |
| Bills receivable and bills payable | 1,00,000 | 60,000 |
| Closing stock | 4,00,000 | |
| Investments (short-term) | 80,000 | |
| Capital | | 15,00,000 |
| Drawings | 1,30,000 | |
| Net profit | | 6,20,000 |
| | 26,00,000 | 26,00,000 |

நிருபனின் இருப்புகளிலிருந்து 2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | Dr. (ரூ.) | Cr. (ரூ.) |
|---|---|---|
| பொறி மற்றும் இயந்திரம் | 8,00,000 | |
| நிலம் மற்றும் கட்டடம் | 6,00,000 | |
| அறைகலன் | 1,50,000 | |
| கைரொக்கம் | 20,000 | |
| வங்கி மேல்வரைப்பற்று | | 1,80,000 |
| கடனாளிகள் மற்றும் கடனீந்தோர் | 3,20,000 | 2,40,000 |
| பெறுதற்குரிய மற்றும் செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டு | 1,00,000 | 60,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 4,00,000 | |
| குறுகிய கால முதலீடுகள் | 80,000 | |
| முதல் | | 15,00,000 |
| எடுப்புகள் | 1,30,000 | |
| நிகர இலாபம் | | 6,20,000 |
| | 26,00,000 | 26,00,000 |

7. What is the Need for adjustment entries?
சரிகட்டு பதிவுகளின் தேவைகள் யாவை?

8. Explain and given Example of Office and administrative expenses.

அலுவலக மற்றும் நிர்வாக செலவுகள் குறித்து எடுத்துகாட்டுகளுடன் எழுதுக.

9. From the following balances extracted from the books of Raju a trader on automobiles, prepare trial balance as on 31st March, 2017.

| Particulars | Rs. | Particulars | Rs. |
|---|---|---|---|
| Cash in hand | 5,500 | Direct expenses | 5,000 |
| Discount received | 300 | Carriage outwards | 3,500 |
| Creditors | 15,000 | Capital | 45,000 |
| Buildings | 50,000 | Purchases | 49,700 |
| Opening stock | 6,000 | Sales | 59,400 |

மோட்டார் வாகனப் பொருட்களை விற்பனை செய்யும் ராஜு என்பவரது ஏடுகளிலிருந்து 2017 மார்ச் 31ஆம் நாளன்று எடுக்கப்பட்ட கணக்குகளின் பின்வரும் இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| கை ரொக்கம் | 5,500 | நேரடிச் செலவுகள் | 5,000 |
| பெற்ற தள்ளுபடி | 300 | வெளித் தூக்குக் கூலி | 3,500 |
| கடனீந்தோர் | 15,000 | முதல் | 45,000 |
| கட்டடம் | 50,000 | கொள்முதல் | 49,700 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 6,000 | விற்பனை | 59,400 |

10. State whether the following are capital or revenue items :

(a) Rs. 5,000 spent towards additions to buildings

(b) Second-hand motor car purchased for Rs. 30,000 and paid Rs. 2,000 as repairs immediately

(c) Rs. 10,000 was spent on painting the new factor

(d) Freight and cartage on the new machine Rs. 150, erection charges Rs. 200

(e) Rs.150 spent on repairs before using a second hand car purchased recently.

பின்வருவனவற்றுள் முதலின, வருவாயின, இனங்களா என்பதை கூறுக.

(அ) ஏற்கனவே உள்ள கட்டடத்தோடு கூடுதலாகக் கட்டியது ரூ. 5,000

(ஆ) பழைய மகிழுந்து வாங்கியது ரூ. 30,000 மேலும், அதனை உடனடியாக பழுது பார்த்ததற்கானச் செலவு ரூ. 2,000

(இ) புதிய தொழிற்சாலையை வண்ணம் பூசுவதற்கானச் செலவு ரூ. 10,000

(ஈ) புதிய இயந்திரம் மீதான ஏற்றிச் செல் செலவு, வண்டிக்கட்டணம் ரூ. 150 மற்றும் நிறுவுகைச் செலவுகள் ரூ. 200

(உ) வாங்கிய பழைய வாகனத்தை பழுது பார்த்ததற்கானச் செலவு ரூ. 150.

---